விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 063 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 08 திங்கட்கிழமை (20.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# தேர்தல் பணிகளை இடைநிறுத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு அரச அதிகாரிகளுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

தபால்மூல வாக்களிப்பை காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளதால் தேர்தல் பணிகளை இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரச அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தல்கள் அடங்கிய பட்டியலை அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் உதவித் தேர்தல் அதிகாரிகளுக்கும் ஆணையாளர் நாயகம் அனுப்பியுள்ளார். 11

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் மூன்றாம் தவ 11

### குழந்தைகளின் பசி போக்க
## மரத்தில் பலாக்காய் பறிக்கச் சென்ற தாய்
### தவறிவிழுந்து மரணம்

(கம்பளை)

குழந்தைகளின் பசி போக்க மரத்தில் பலாக்காய் பறிக்கச் சென்ற தாய் ஒருவர் மரத்திலிருந்து தவறிவிழுந்து உயிரிழந் 11

### மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக
## இன்று இரவு 7 மணிக்கு மின்விளக்குகளை அணைத்து இருட்டு போராட்டத்துக்கு அழைப்பு

(கொழும்பு)

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக இன்று இரவு 7 மணிக்கு மின் விளக்குகளை அணைத்து இருட்டுப் போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வுக்கு எதிராக இன்று இரவு 7 மணிக்கு அனைத்து மின் விளக்குகளையும் அணைக்குமாறு மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் பொதுமக்களிடம் கேட்டுக் கொள்கிறது.

இது தொடர்பில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் அனுருத்த சோமதுங்க கருத்து தெரிவிக்கையில்,

"இன்று இரவு 7 மணிக்கு, உங்கள் வீட்டின் மின் கட்டமைப்பை அணைக்கவும். மின் விளக்குகள், மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தவும். இதன் விளைவை அடையாளபூர்வமாக பிரபலப்படுத்துவோம்." என்றார்.

மின் கட்டணம் 66% அண்மை 11


## மனித நுகர்வுக்கு தகுதியற்ற உணவுகளை வழங்கும் உணவகங்கள்

(கொழும்பு)

இலங்கையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கூற்றுப்படி, நாட்டிலுள்ள சுமார் 18% உணவகங்கள் திருப்தியற்ற நிலையில் உள்ளன.

குறித்த 18 வீதமான உணவகங்கள் 11

### 34 ஆண்டுகளுக்கு பின்னர்
## குடியரசு பெரஹரா



11

## தேர்தலை சீர்குலைக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபடுகின்றது

### ஆசியாவின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான வலைப்பின்னல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக ஆசியாவின் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான "சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலைப்பின்னல்" என்ற அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. 11

### கறுப்பு வாரமாக பிரகடனப்படுத்தி
## ஆர்ப்பாட்டம், பணிப் பகிஷ்கரிப்புக்கு தொழிற்சங்கங்கள் ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக் கொள்கை மற்றும் அசாதாரணமான முறையில் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமை என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அடுத்த வாரத்தை கறுப்பு வாரமாக பிரகடனப்படுத்தி பிரதான தொழிற்சங்கங்களினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் பணிப் பகிஷ்கரிப்பும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் காரணமாக மின்சாரம், நீர், பெற்றோலியம், வைத்தியசாலைகள், வங்கி, துறைமுகம் 11

### தொடர் மின்விநியோகத்துக்கு
## 36 நிலக்கரி கப்பல்களை இறக்குமதி செய்யத் திட்டம்

(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியான மின்விநியோகத்துக்காக 36 நிலக்கரிக் கப்பல்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 13 நிலக்கரிக் கப்பல்களுக்கான கொடுப்பனவுகள் நிறைவடைந்துள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

12ஆவது கப்பலை தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL
Kannathiddy Road, Jaffna

## 2023 A/L DAY CLASS
கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
(2022 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)

**நேரடி வகுப்புக்கள்**

திங்கள் தொடக்கம் வெள்ளி

**Com.MATHS**
P.SENTHILNATHAN 7.00 - 9.00AM
S.SIVAKARAN 5.00 - 7.00PM

**BIOLOGY**
V.S.GUNASEELAN 8.00 - 9.30AM

**CHEMISTRY**
S.T.UMASHANKAR
V.NANTHA
9.30 - 11.30 AM

**PHYSICS**
G.PIRABA
R.RAAKULAN
11.30 - 1.30 NOON

**நிகழ்நிலை வகுப்புக்கள்**

**Com.MATHS**
MON TO FRI
P.SENTHILNATHAN 7.00 - 9.00AM

**BIOLOGY**
MON TO FRI
K.RAGAVAN 8.00 - 9.30PM

**CHEMISTRY**
MON TO FRI
S.T.UMASHANKAR 7.30 - 8.30AM
MON TO FRI
V.NANTHA 5.30 - 7.30AM
(EVERY THURSDAY EXAM)

**PHYSICS**
MON TO FRI
G.PIRABA 7.30 - 9.30AM
MON TO SAT
R.RAAKULAN 8.00 - 9.30PM

சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு
076 569 3006, 076 566 3006
0777 91 7611
https://facebook.com / NEW SCIENCE HALL JAFFNA

ஆரம்பம்
21.02.2023

(C-6008)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்
## நன்றி நவிலலும்



தோற்றம் 10 . 08 . 1956

மறைவு 22 . 01 . 2023

கடந்த 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி சிவசோதி நல்லம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 21.02.2023 செவ்வாய்க் கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதே தினம் மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தியினை அறிந்து நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் கண்ணீர் அஞ்சலிகள் பதாதைகள் வெளியிட் டும் மேலும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கிய, உறவினர்கள், அன் பர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சில்லியோடை,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

(C-6009)

# 7ஆம் ஆண்டின் நினைவில்



தோற்றம் 06.05.1989

மறைவு 20.02.2016

அமரர்
## தெய்வேந்திரன் பகீசன்

பயணத்தின் இருள் விலகாத பொழுதினை
பனி விழுங்கியிருந்தது
எருமை மீது இருந்த கூற்றுவன்
ஏவி விட்ட பொறியில்
செய்தியாகிப் போனாயே
என்றைக்கும் நீ எம்மை
நிறைத்திருப்பாய்.



"தாரணி"
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்

# 45ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும்
## நன்றி நவிலலும்



தோற்றம் 05 . 11 . 2001

மறைவு 07 . 01 . 2023

கடந்த 07.01.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்வம்

## அமரர் ஜெயக்குமார் பானுதன் (பானு)

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்றையதினம் 20.02.2023 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவிலும் நடைபெற உள் ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம் .

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலை பேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூகவலைத்தளம், துண்டுப் பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு :- இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் .

நன்றி

வாலையம்மன் கோவிலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.


தகவல் :
T.P.No :- 077 635 3151 குடும்பத்தினர்

(C-6010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மறுசீரமைப்பு இன்றி நெருக்கடியில் இருந்து மீள முடியாது

## உலக வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளர்



(கொழும்பு)

**நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள கொள்கைகளை மறுசீரமைக்க வேண்டும் என உலக வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளர் சாந்த தேவராஜன் தெரிவித்துள்ளார்.**

அதனை செய்யாமல் விட்டால் தற்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கையால் மீள முடியாது என்றும் 5 வருடங்களின் பின்னர் மீண்டும் கடன் நெருக்கடி ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவைப் பெறுவதற்கு பலர் திணறிக் கொண்டிருக்கும் நிலையில் நாட்டில் செல்வந்தர்களுக்குத் தொடர்ந்து நிதியளிக்கப்படுவது வேதனையளிக்கிறது.

இலங்கை மக்கள் கொண்டிருக்கும் இயலுமையை வலுவிழக்கச்செய்யாமல் கொள்கைகளை அரசாங்கம் உடனடியாக மறுசீரமைக்க வேண்டும் என சாந்த தேவராஜன் தெரிவித்துள்ளார். (நி)

# இந்திய விசா மையம் மீண்டும் திறப்பு

IVS GLOBAL
India Visa and Passport Centre Colombo

(கொழும்பு)

பாதுகாப்பு காரணங்களுக்காக கடந்த வாரம் மூடப்பட்ட இந்திய விசா விண்ணப்ப மையம் இன்று திங்கட்கிழமை திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விசா மற்றும் பிற சேவைகளுக்காக இந்திய விசா விண்ணப்ப மையத்தை இன்று முதல் நாட முடியும் என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (நி)

# பெருமளவான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

ஒவ்வொரு மாதமும் 50 முதல் 60 வரையான மருத்துவர்கள் வெளிநாட்டில் வேலை வாய்ப்பிற்காக விடுமுறைக்கு விண்ணப்பிப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர், மருத்துவக் கலாநிதி சம்மில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சில மருத்துவர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியிருக்கலாம் எனவும் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக, நாட்டை விட்டு வெளியேறிய மருத்துவ நிபுணர்களின் பட்டியல் சுகாதார அமைச்சகத்திடம் இல்லை. எனினும் தமக்குக் கிடைத்த தகவலின்படி கடந்த வருடம் 1000 இற்கும் அதிகமான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

நகர்ப்புறங்களில் உள்ள அரச மருத்துவமனைகள் கூட இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை ஆகியவை மருத்துவர்களை விரட்டுகின்றன. அவர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி கவலைப்படுகிறார்கள்.

தற்போதைய வரி அதிகரிப்பு மேலும் மருத்துவ நிபுணர்களை வெளியேறச் செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இறக்குமதிக்கான தடை தொடர்ந்தால் இலங்கையில் இருந்து வெளியேறுவோம்

## இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர்

(கொழும்பு)

இறக்குமதி தடையை இலங்கை தொடர்ந்தால் இலங்கையிலிருந்து ஜேர்மனியை சேர்ந்த நிறுவனங்கள் வெளியேற வேண்டியிருக்கும் என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹொல்ஹெர் சியுபோட் எச்சரித்துள்ளார்.

இறக்குமதி தடை தொடர்பில் ஜேர்மனியை சேர்ந்த நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மேலும் இரண்டு வருடங்களிற்கு இறக்குமதி தடையை தொடர்ந்தால் ஜேர்மனியை சேர்ந்த பல நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறும் நிலையேற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிறுவனங்கள் வாகன உதிரிப்பாகங்கள் உட்பட தங்களின் பல உற்பத்திகளை இலங்கையில் ஊக்குவிக்கின்றன.

டொலர் தட்டுப்பாடு காரணமாக இலங்கை பல பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தல் ஒத்திவைக்கப்படினும் வேட்புமனுக்கள் செல்லுபடியாகும்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை உரிய தினத்தில் நடத்த முடியாமல் போனாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் வாக்களிப்பு இடம்பெறும் வரை செல்லுபடியாகும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு பொது தேர்தலும் இவ்வாறே நடத்தப்பட்டதாக தேர்தல் ஆணைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம், நிதி இல்லாத காரணத்தினால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உறுதியளித்தவாறு நடத்த முடியாமல் போகும் நிலை ஏற்படும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், அந்த உறுதிமொழிக்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு இதுவரையில் நிதி கிடைக்கவில்லை என மனு ஒன்றின் மூலம் உயர்நீதி மன்றத்திற்கு தெளிவுபடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (நி)

# உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரிய மனு இன்று விசாரணைக்கு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை இன்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைக்குமாறு கோரி ஓய்வு பெற்றஇராணுவகேணல் ஒருவர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதேவேளை வாக்குறுதி அளித்தபடி உள்ளூராட்சித் தேர்தலை நடத்த இயலாது என இன்று உயர் நீதிமன்றத்தில் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

போதிய நிதி கிடைக்காத காரணத்தினால், தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்துவதில் உள்ள சிக்கல்களை குறிப்பிடவுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திற்கு முன்னதாக அறிவித்திருந்தது.

தபால் வாக்குச்சீட்டுகள் அரச அச்சகத்தில் இருந்து சரியான நேரத்தில் கிடைக்காததால், தபால் மூல வாக்குப்பதிவு கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஐ.எம்.எப் இடமிருந்து

# சமிக்ஞை கிடைத்ததும் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைத்தவுடன் அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பில்லியன் டொலர் கடன் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் தற்போது பச்சைக்கொடி காட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு மார்ச் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி கிடைக்கும் என்றும் ஜனாதிபதி - ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையை மாற்றுமாறு ஜனாதிபதிக்கு நெருக்கமான நபர்கள் மற்றும் அமைப்புகள் கோரியுள்ளன.

இந்நிலையில் விளையாட்டு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, ஊடகத்துறை, துறைமுகம், தொழில் அமைச்சு பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# மின்கட்டண அதிகரிப்பு சட்டவிரோதமானது அதற்கெதிராக போராடுவேன்-ஜனகரத்நாயக்க

(கன்பெரா)

மின்கட்டண அதிகரிப்பு சட்டவிரோதமானது எனவும், இலங்கை திரும்பிய பின்னர் அதற்கு எதிராக போராடவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனகரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு புறம்பான முடிவுகளை எடுத்த அனைவரும் அதன் விளைவை அனுபவிக்க நேரிடும் என தெரிவித்த அவர்,

இந்த முடிவை திரும்பப் பெற முடியும் எனச் சுட்டிக் காட்டினார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குடா மாணவர்கள் கராத்தேயில் பதக்கங்கள்



கிளிநொச்சி பள்ளிக்குடாவில் இயங்குகின்ற கிங்டம் சொடோக்கன் கராத்தே அக்கடமி கழக மாணவர்கள் அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற open karate championship போட்டியில் பங்குபற்றி பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். (நி)

# ஐ.பி.எல் தொடர் 2023 போட்டி அட்டவணை வெளியீடு



கடந்த ஆண்டு ஐ.பி.எல் கிண்ணத்தை ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணி வென்றது. இந்நிலையில், இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

மார்ச் 31 ஆம் திகதி தொடங்கி மே 28 ஆம் திகதி வரை போட்டி நடைபெறுகிறது. முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் குஜராத் டைட்டன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் மோதுகிறது. இப்போட்டி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது நாளில் இரண்டு ஆட்டங்கள் நடக்கின்றன. ஒரு ஆட்டத்தில், பஞ்சாப் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. மற்றொரு ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ், டெல்லி அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த சீசனில் மொத்தம் 12 மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. மொத்தம் 70 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. லீக் ஆட்டங்கள் மே 21 ஆம் திகதி நிறைவடைகின்றன. இறுதிப்போட்டி மே 28ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறும். (4)

# மாசி மாத இராசி பலன்கள் 13.02.2023-14.03.2023

## கும்பம்

**பிறர் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் கும்ப இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். அதேநேரம் தன ஸ்தானத்தில் குருவும் சொந்த வீட்டில் இருக்கிறார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். உங்கள் இராசிநாதன் சனியோடு பஞ்சம - அஷ்டமாதிபதியான புதன் இணைந்திருக்கிறார். உங்கள் இராசியில் சூரியன், சுக்கிரன் சேர்க்கை பெற்றுள்ளனர். சுகஸ்தானத்தில் செவ்வாய் வீற்றிருந்து தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிகிறது. எனவே புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

.மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், உச்சம் பெறுவது யோகம் தான். பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள். பிரிந்த உறவு மீண்டும் ஒன்று சேரும். நட்பால் நன்மை கிடைக்கும். தற்காலிகப் பணியில் உள்ளவர்கள் நிரந்தரப் பணியாளராக மாறும் வாய்ப்பு உண்டு.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம- அஷ்டமாதிபதியான புதன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் போது நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். விரயங்கள் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. பாகப்பிரிவினைக்காக முயற்சி செய்திருந்தவர்களுக்கு, காரியம் சுமுகமாக கைகூடும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான் என்றாலும் பஞ்ச மாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகளைப் பற்றிய கவலை அதிகரிக்கும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. வீடு வாங்கும் முயற்சியில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கும் பொழுது, புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். "வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது படித்த படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து, உதிரி வருமானம் வந்து சேரும். உத்தியோக உயர்வால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அங்கிருந்து கொண்டு மகரத்தில் உள்ள சனியைப் பார்க்கப் போகிறார். எனவே விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் உறுதியாகலாம். குடும்பச்சுமை கூடும். கொடுக்கல் - வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பணிபுரியும் இடத்தில் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. வேறு இலாகாவிற்கு மாறும் சூழ்நிலை கூட உண்டு.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. விரயங்கள் கூடுதலாக இருக்கும். எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் மன அமைதி ஏற்பட, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உடன் பிறப்புகளின் ஆதரவு ஓரளவே கிடைக்கும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

## மீனம்

**செய்வதை திருந்தச் செய்ய வேண்டும் என்று நினைக்கும் மீன இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியிலேயே பலம் பெற்றுச் சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகும். பொருளாதாரப் பிரச்சினை அகலும். சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தடைகள் ஏற்படும். இருப்பினும் குரு பலத்தால் அவற்றை சமாளிப்பீர்கள். உங்கள் இராசிநாதன் குரு 5, 7, 9 ஆகிய இடங்களை பார்க்கின்றார். எனவே யோகங்கள் படிப்படியாக வந்து சேரும். பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறுவதால் வருமானம் திருப்தி தரும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். தொல்லை தரும் எதிரிகள் விலகிச் செல்வர். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வெளிநாட்டு வணிகத்தில் ஆதாயம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர். 2 இல் வரும் ராகு திரண்ட செல்வம் தரும் என்பார்கள். எனவே பொருளாதாரம் உயரும். அதேநேரம் 8 இல் கேது இருப்பதால் ஆன்மிகச் செலவு அதிகரிக்கும்.

**உச்ச சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி 4 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் சுக்கிரனுக்கு, அது உச்ச வீடாகும். உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகைக் கிரகமாக விளங்கும் சுக்கிரன், உச்சம் பெறும் போது எதிரிகளின் பலம் கூடும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. தடைகளும் தாமதங்களும் வந்து சேரும். இனம் புரியாத கவலை மேலோங்கும். உறவினர்கள் உங்கள் மீது குற்றம் சாட்டுவர். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். பணி ஓய்விற்குப் பிறகு வர வேண்டிய தொகை வராமல் நிலுவையில் நிற்கலாம்.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 9 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான புதன், 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது நற்பலன்களை வழங்கும். பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் கூடும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

மாசி 25 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

**மேஷ - சுக்கிரன் சஞ்சாரம்**

மேஷ இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து, 8 இம் இடத்தைப் பார்ப்பதால், இழப்புகளை ஈடு செய்ய நல்ல வாய்ப்புகள் வரும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை கிடைக்கும். உத்தியோக முயற்சி கைகூடும்.

**மிதுன - செவ்வாய் சஞ்சாரம்**

மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் சஞ்சரித்து லாப ஸ்தானத்தில் உள்ள சனியைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்களில் தாமதம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் திருப்தி தராது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களின் ஆதரவு குறையலாம். இக்காலத்தில் சனி மற்றும் செவ்வாய்க்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் இராசிநாதன் குரு பலம் பெற்றிருப்பதால் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பணநெருக்கடி அகலும். பக்கத்தில் இருப்பவர்கள் பக்கபலமாக இருப்பர். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் வேலை அல்லது படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். இடமாற்றம் இனிமை தரும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. செவ்வாய்ப் பெயர்ச்சிக்குப் பிறகு உடல்நலத்தில் கவனம் தேவை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சுமார் 150 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு – மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் சுமார் 150 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அத்துடன், சுகாதார அமைச்சினால் தேவையான பல மருந்துப் பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க முடியவில்லை என இந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவதற்கும் நோயாளர் பராமரிப்பு சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் இயலவில்லை.

அரசாங்க மருத்துவமனைகளில் அத்தியாவசிய சத்திரசிகிச்சைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு சுகாதார அமைச்சினால் அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் மருத்துவர் சமில் விஜேசிங்க கருத்து வெளியிட்டார். (நி)


17ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**செல்லையா வீரசிங்கம்**

12ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
**இராசமணி வீரசிங்கம்**

திதி:20.02.2023

ஆண்டுகள் கோடி ஓடி மறையும் அழிந்திடுமோ உம் நினைவலைகள். நாம் வாழ்ந்திடும் காலம் முழுவதும் எம் நெஞ்சினில் நிலையாய் வாழ்வீர். மாண்டவர் மீண்டிலர் என்பது உண்மை உம் காலடிகளை தொழுதே வாழ்கிறோம்.

இல.14, சிறிவெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
மகன் சிறிதரன்

(C-6006)


## இராசிபலன்

20.02.2023
மாசி 08 , திங்கட்கிழமை
அமவாசை பிற்பகல் 1.51 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 12.55 மணிவரை
சுபநேரம் -12.32-2.02 மணிவரை
இராகுகாலம்- 8.02-9.32 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

**வளவன்**

**மேஷம்** – வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கடகம்** – ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்** – கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**மகரம்** – பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம்பெறலாம், பொது வழியில் புகழ் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாமடைவீர்கள்.

**ரிஷபம்** – செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சமூதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**சிம்மம்** – மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழி வகைசெய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** – நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** – பகை விலகி பாசம் கூடும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி** – முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** – உறவினர்களின் ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மீனம்** – எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்விதமாக நடைபெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

வெற்றியில் [illegible]யை அருகே அழைக்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி விரத நிறைவு நயினாதீவில் தீர்த்தம்





(யாழ்ப்பாணம்)
சிவராத்திரி விரத நிறைவில் நயினை நாகபூசணி அம்மன் சமுத்திர தீர்த்த மாடினார்.

சிவராத்திரியை முன்னிட்டு நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றுவந்தன.

விரத நிறைவை ஒட்டி, நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அம்மன் சமுத்திரத்தில் தீர்த்த மாடினார். (நி-33)

## தென்மராட்சி விவசாயிகளுக்கு

# நெல் உலர வைப்பதற்கான இடவசதியை ஏற்படுத்தித் தர பிரதேச சபை நடவடிக்கை

(சாவகச்சேரி)
தென்மராட்சி நெற்செய்கையாளர்களின் பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்ற நெல் உலர விடுவதற்கான இடவசதியை ஏற்படுத்திக் கொடுக்க சாவகச்சேரிப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருப்பதாக அதன் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்

காலபோக அறுவடையின் பின்னர் தென்மராட்சி விவசாயிகள் நெல்லினை உலர விடுவதற்கான தளம் இன்றி சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக ஏ32 வீதி மற்றும் ஏ9 வீதிகளில் நெல்லை உலர விடுவதனால் வீதிவிபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே தான் சாவகச்சேரி பிரதேசசபை இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நாவற்குழியில் உள்ள அரச உணவுக் களஞ்சிய சாலை முன்பாக நெல்லை உலர விடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாவற்குழி களஞ்சிய சாலை கொரோனா பேரிடர் காலத்தில் தனிமைப்படுத்தல் நிலையமாக காணப்பட்டது. அதன் பின்னர் குறித்த களஞ்சியசாலை மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகிறது. அதனைக் கருத்திற் கொண்டே களஞ்சியசாலை முன்பாக விவசாயிகள் நெல்லை உலர வைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-30)

# பதவிக்காலம் நிறைவடைந்தாலும் வேலைத்திட்டங்களை பூர்த்தியாக்க வேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் வலியுறுத்து

(சாவகச்சேரி)
தற்போது இயக்கத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்தாலும் கிடப்பில் போடப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்ட வேலைத்திட்டங்களை முடிவுறுத்த வேண்டும் என சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற பெப்ரவரி மாத அமர்வில் கலந்துகொண்ட உறுப்பினர்களே இதனை வலியுறுத்தியிருந்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

சாவகச்சேரிப் பிரதேச சபையின் 2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத்திட்ட வேலைத்திட்டங்கள் பலவும் நாட்டு சூழ்நிலை காரணமாக கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது சபைகளின் ஆயுட்காலம் முடிவுக்கு வருகின்றன. எனவே இந்த சபைகள் கலைக்கப்பட்டு புதிய சபைகள் அமைக்கப்பட்டாலும் சபைத் தீர்மானம் மற்றும் வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைவாக சகல வேலைத் திட்டங்களையும் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-30)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவ கால கடைகளுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)
புனித பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த யாத்திரை உற்சவத்திற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய விழாக் கால வியாபார நிலையங்களுக்கான நில வாடகைக்கு வழங்குவதற்கான முற்பதிவுகளுடனான தொடர் இலக்கங்கள் வழங்கு தல் மற்றும் விழாக் காலத்தில் வியாபார நிலையம் நடத்துபவர்கள் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் பற்றிய கலந் துரையாடல் பூநகரி பிரதேச சபையினால் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 1 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பூநகரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இக் கூட்டம் நடைபெறும் என பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

முன்னேற்பாட்டு கலந்துரையாடலில் கலந்து கொள்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-33)

# நல்லூரில் வாள்வெட்டு இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரு இளைஞர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (நி-33)

## எதிர்வரும் 6 மாதங்களில்

# கோழி உற்பத்தி தொழில் துறை வழமைக்கு திரும்பும்

(கொழும்பு)
எதிர்வரும் ஆறு மாதங்களில் இலங்கையில் கோழிப்பண்ணை தொழில் துறை நிலையான தன்மைக்கு திரும்பும் என. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, கால்நடை தீவன தட்டுப்பாடு, தாய் விலங்குகள் இறக்குமதி நிறுத்தம், உரம் தட்டுப்பாட்டால் உள்நாட்டில் சோள உற்பத்தி சரிவு, சோளம் இறக்குமதி இடைநிறுத்தம் ஆகிய காரணங்களால் கோழிப்பண்ணை தொழில் சார்ந்த பொருட்களில் சரிவு ஏற்பட்டது.

எனினும் கடந்த வருட இறுதிக்குள் 36,000 முட்டையிடும் கோழிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டுக்குத் தேவையான அளவு அரிசி கையிருப்பு உள்ளது. இதன் காரணமாக பழைய அரிசி மற்றும் நெல் இருப்புக்களை கால்நடை தீவனமாக பயன்படுத்த முடியும் என்பதனால் தட்டுப்பாடு ஏற்படாது என விவசாய அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

தனியார் துறை பண்ணைகளில் தற்போது சுமார் 15 இலட்சம் கோழிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# குடிநீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலை

## நீர் வழங்கல் சபை

(கொழும்பு)
மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், குடிநீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

செலவுகளை ஈடு செய்வதற்காக, குடிநீர் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளதாக அந்த சபையின் வணிகப் பிரிவு பிரதிப் பொதுமுகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார்.

நீரைப் பெற்றுக்கொண்டு, அதனை மக்களுக்கு விநியோகிக்கும் செயற்பாடுகளுக்காக, பாரிய அளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், குடிநீர் கட்டண உயர்வு குறித்து, தற்போது வரையில், கொள்கை ரீதியில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

எனினும், செலவுகளை ஈடு செய்வதற்காக, வருடாந்தம் நீர் கட்டணத்தை திருத்த, கடந்த ஆண்டு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

2012 ஆம் ஆண்டின் கணக்கீட்டின் அடிப்படையில், 70 வீத அதிகரிப்பே கடந்த ஆண்டு கிடைத்தது.

இந்த நிலையில், செலவுகளை ஈடுசெய்வதற்கு, தற்போதைய வருமானம் போதுமானதாக இல்லை என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணம் உட்பட நாட்டில் ஏழு நாட்களில் 51 பேர் படுகொலை

## மாகாணப் பொலிஸார் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் கடந்த 7 நாட்களில் (12 ஆம் திகதி-18 ஆம் திகதி வரை) மாத்திரம் 51 படுகொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**


மாகாணப் பொலிஸாரின் உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட 7 நாட்களில் 3 சிறுவர்கள், 8 பெண்கள் உள்ளிட்ட 51 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

குடும்பத் தகராறு, தனிப்பட்ட தகராறு, காதல் விவகாரம், போதைப்பொருள் விற்பனைப் போட்டி மற்றும் கோஷ்டி மோதல்களால் மேற்படி படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதற்கமைய வடமேல் மாகாணத்தில் 7 நாட்களில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் 9 பேரும் தென் மாகாணத்தில் 7 பேரும் மத்திய மாகாணத்தில் 3 பேரும் சப்ரகமுவ மாகாணத்தில் 2 பேரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வட மத்திய மாகாணத்தில் 6 பேரும் ஊவா மாகாணத்தில் 5 பேரும் கிழக்கு மாகாணத்தில் 4 பேரும் வடக்கு மாகாணத்தில் 3 பேரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். (நி)

# இலங்கையின் முதலாவது சர்வதேச பறவைகள் பூங்கா




(கொழும்பு)

இலங்கையின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சுற்றாடல் சுற்றுலா வலயம் நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த பறவைகள் பூங்கா கண்டி ஹந்தானையில் உருவாக்கப்பட்டுள்ளது.

"ஹந்தானை சர்வதேச பறவைகள் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு மையம்" என அழைக்கப்படவுள்ள குறித்த பூங்கா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இன்று பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த பறவைகள் பூங்காவானது புலம்பெயர்ந்து வரும் பல பறவைகளின் இருப்பிடமாக உள்ளதுடன், காயமடைந்த பறவைகளுக்கு சிகிச்சை அளித்து விடுவிக்கும் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக 490 மில்லியன் ரூபாவை இலங்கை அரசாங்கம் இதுவரை செலவு செய்துள்ளது.

வித்தியாசமான பல வெளிநாட்டு பறவைகள் இங்கு உள்ளதுடன், அவற்றை பராமரிக்க நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (நி)

# இராணுவத்திலிருந்து விலகிய

## 30 ஆயிரம் பேர் இன்னும் சரணடையவில்லையாம்

(கொழும்பு)

இராணுவ சேவையிலிருந்து விலகியவர்களுக்கு மீண்டும் சேவையில் இணைவதற்காக பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போதிலும், முப்படையைச் சேர்ந்த மேலும் 30,000 பேர் இன்னும் சரணடையவில்லை என்பதை பாதுகாப்புத் தரப்பினர் கண்டுபிடித்துள்ளனர்.

பொது மன்னிப்புக் காலத்தின் போது, ஆயுதப் படையிலிருந்து வெளியேறிய 70 அதிகாரிகள் உட்பட 22,729 பேர் சரணடைந்ததாக பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# நடிகர் மயில்சாமி காலமானார்



(சென்னை)

பிரபல நடிகர் மயில்சாமி திடீர் உடல்நலக்குறைவால் தமது 57 ஆவது வயதில் காலமானார்.

சென்னை சாலிகிராமத்தில் வசித்து வந்த இவருக்கு நேற்று அதிகாலை திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, குடும்பத்தினர் சென்னை போரூரில் உள்ள தனியார் மருத்து வமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

ஆனால் மருத்துவமனை செல்லும் முன்பே அவரின் உயிர் பிரிந்துள்ளதாக மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர். மயில்சாமியின் இறப்புக்கு திரையுலகைச்சேர்ந்த பலரும் தமது இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். (நி)

# இந்தோனேஷியாவின் கடற்படைக் கப்பல் இலங்கையில்

(கொழும்பு)

இந்தோனேஷியாவின் கடற்படைக் கப்பல் ஒன்று உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கிரி.ரேடன் ஏடி மாடாடினடா 331 எனப்படும் கப்பல் நேற்று முற்பகல் இலங்கை கடற்படையினரால் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்பட்டது.

குறித்த கப்பல் நாளை இலங்கையிலிருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 12 ½ சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்:Auto mobile Engineering சொந்த வியாபாரம் இறக்குமதியாளர்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13353 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:31 ¼ சூரி 10 செவ் 1 இல்<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/13396 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா:சூரி 12 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: B.Eng(Hons)in Computer Networking<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13354 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 61 ¼ சூரி. செவ் 7 இல்<br>உயரம்: 167 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/13397 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா:சூரி , செவ் 5 இல் உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13355 | பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்:ரோகினி 1<br>கி.பா:47 சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்: BBA Charted Accountant Intimae Audit (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ: G/13398 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 3<br>கி.பா: 16 சூரி 7 செவ் 4 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி கட்டார் Chatted Account Internal Auditor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (BAதவிர்ந்த) வைத்தியர் வேண்டாம் கட்டார் செல்லக்கூடிய பெண்<br>தொ.இ: B/13356 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:மூலம் 4<br>கி.பா: 27 சூரி. செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: Bcom Following<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13399 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 107





“ஆனாலும் இத்தனை நாளைக்குப் பிறகு கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாரே?”

“ஆமாம் அது கொஞ்சம் வியப்பான காரியந்தான். கல்யாணத்துக்குப் பிறகு மாப்பிள்ளைத் தேவரின் மனமே மாறிப் போயிருப்பதாயும் சொல்கிறார்கள் நமக்கென்ன அதைப் பற்றி? பெரிய இடத்துப் பேச்சுப் பேசாமலிருப்பதே நல்லது”

சேந்தன் அமுதனிடம் இன்னும் பல விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் வந்தியத்தேவனுக்கு இருந்தது. ஆனால் அதிகமாக ஏதேனும் கேட்டுச் சந்தேகத்தைக் கிளப்பி விட அவன் விரும்பவில்லை. இத்தகைய சாதுப் பிள்ளையின் சிநேகம் தனக்குப் பேருதவியாயிருக்கும். தஞ்சையில் தங்க இம்மாதிரி ஒரு வீடு அகப்பட்டதும் தன்னுடைய அதிர்ஷ்டந்தான்.

அதையெல்லாம் கெடுத்துக் கொள்வானேன்? மேலும், நீண்ட பிரயாணக் களைப்புடன் முதல்நாள் இரவு கண் விழித்ததும் சேர்ந்து கொண்டது. கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. சேந்தன் அமுதன் அவனுடைய நிலையை அறிந்து விரைவில் படுக்கை போட்டுக் கொடுத்தான்.

தூக்க மயக்கத்தில் கடைசியாக வந்தியத்தேவனுடைய மனத்தில் பழுவூர் இளையராணியின் திருமுகம் வந்தது. அப்பப்பா! என்ன அழகு! என்ன ஜொலிப்பு! அந்த மாயமோகன வடிவத்தைத் திடீரென்று அவன் பார்த்ததும் அடியோடு செயல் இழந்து கண் கொட்டாமல் திகைத்து நின்றது இன்னொரு அனுபவத்தை அவனுக்கு நினைவூட்டியது.

சிறுபிராயத்தில் ஒரு சமயம் காட்டு வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று படமெடுத்து ஆடிய பாம்பு ஒன்று அவன் முன் எதிர்பட்டது. அதன் அழகே அழகு! கவர்ச்சியே கவர்ச்சி! வந்தியத்தேவனால் பாம்பின் படத்திலிருந்து கண்ணை அகற்றவே முடியவில்லை; கண் கொட்டவும் முடியவில்லை.

பார்த்தது பார்த்தபடி நின்றான் பாம்பும் ஆடிக் கொண்டேயிருந்தது! பாம்பு ஆடிய போது அதற்கிணங்க, இவன் உடம்பும் ஆடியது இதன் முடிவு என்ன ஆகியிருக்குமோ தெரியாது.

திடீரென்று ஒரு கீரிப்பிள்ளை வந்து பாம்பின் மீது பாய்ந்தது. இரண்டும் துவந்த யுத்தம் தொடங்கின. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வந்தியத்தேவன் ஒரே ஓட்டமாக ஓடி வந்து விட்டான்!.

சீச்சீ! என்ன உதாரணம்! இந்தப் புவன மோகினியான சுந்தராங்கியைப் படமெடுத்த பாம்புக்கா ஒப்பிடுவது? இவளுடைய பால் வடியும் முகத்தை ஒரு தடவை பார்த்தாலும் பசி தீர்ந்து விடுமே? நாளைக்கு அவளை மறுபடி காணப் போகிறோமல்லவா! அவளுடைய குரலிலேதான் என்ன மதுரம்! இவள் ஓர் அபூர்வமான அழகி தான்.

ஆனால் குடந்தை சோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் பார்த்த அந்த இன்னொரு பெண்? அவளுடைய முகத்திலும் காந்தி ஒளி விட்டது! அழகு சுடர் விட்டது! இரண்டு முகங்களும் சுந்தர முகங்களாயினும் அவற்றுக்குள் எத்தனை வேற்றுமை! அதில் கம்பீரமும் பெருந்தன்மையும் இதில் மோகனமும் கவர்ச்சியும்!.. இப்படி அவன் உள்ளம் அந்த இரு மாங்கையரின் முகங்களையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்தபோது, மற்றொரு மங்கை வந்து குறுக்கிட்டாள். சர்வாதிகாரக் கொடுங்கோல் அரசியான நித்திராதேவி வந்தியத்தேவனைப் பரிபூரணமாக ஆட்கொண்டாள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### உலக்கை பூஜை

(நேற்றைய தொடர்ச்சி)

மனைவி சொன்ன பதிலைக் கேட்டதும் கட்டுக்கடங்காமல் கோபம் வந்து விட்டது செட்டியாருக்கு.

“அடி அற்பப் பெண்ணே! அந்தப் பண்டாரம் உலக்கையை எதற்காகக் கேட்டாரோ? நான் தானே அனுப்பி வைத்தேன். கேட்டால் கொடுக்கவேண்டியது தானே! என்னை என்ன கேட்டு விட்டுத் தருவது? பாவம்... அந்தச் சிவபக்தர் எவ்வளவு கோபத்தோடு போனாரோ! சரி... சரி... கொண்டு வா... அந்த உலக்கையை! நான் போய் இதைக் கொடுத்து விட்டு அவரை அழைத்து வருகிறேன்” என்று கூவினார் செட்டியார்.

மனைவி உடனே உலக்கையைக் கொண்டு வந்தாள். அதைக் கையில் எடுத்துக் கொண்டு செட்டியார் அந்தப் பண்டாரத்தைத் தேடிக்கொண்டு ஓடினார்.

சற்று தூரத்தில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்த அந்த பண்டாரத்தைப் பார்த்து விட்டார் செட்டியார். உரக்க உரக்க கூவியழைத்துக் கொண்டே பரக்கப் பரக்க ஓடினார்.

ஒரு தெரு முடுக்கில் சென்று திரும்பிப் பார்த்த பண்டாரம், செட்டியார் கையில் உலக்கையோடு தன் பின்னே ஓடி வருவதைப் பார்த்தான்.

“ஐயய்யோ! உலக்கை பூஜையை தலையிலே முடிக்க அந்தச் செட்டியாரே அதைத் தூக்கிக் கொண்டு ஓடி வருகிறாரே” என்று விழுந்தடித்துக் கொண்டு வேகமாக ஓடினான்.

பண்டாரத்தை எப்படியும் திருப்பி அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் செட்டியார் வேகமாக ஓட, அந்த உலக்கை அடியிலிருந்து தன் தலை தப்ப வேண்டுமே என்று பண்டாரம் அதி வேகமாக ஓடினான்.



எவ்வளவு ஓடியும் பண்டாரத்தைப் பிடிக்க முடியவில்லை. அதற்கு மேலும் ஓட முடியவில்லை செட்டியாரால். அவரது தொந்தியும் தொப்பையுமான பருத்த உடல் அதிக நேரம் ஓட இடம் கொடுக்கவில்லை. அன்றைக்கு அந்தச் சிவபக்தருக்கு அன்னம் கொடுக்க முடியவில்லையே என்று சஞ்சலப் பட்டுக் கொண்டு அவர் வீட்டையடைந்தார்.

இதுதான் உலக்கை பூஜை. உங்களுக்கு ஆரூடம் சொன்ன அந்த வேதியனைப் பார்த்து, இப்படித்தான் உலக்கை பூஜை நடத்த வேண்டும். அப்புறம்தான் அவனுக்கு ஆசனோஷ்ணம் பிடிக்கும். அவன் நாசமாவான் குருவே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்” என்று தைரியம் ஊட்டினான் அசங்கதன்.

“நீ சரியான ஆளப்பா. மிகவும் வேடிக்கையாகப் பேசுகிறாய். ஆரூடக்காரன் ஆசன சீதம் என்றான் நீ என்னடாவென்றால் ஆசன உஷ்ணம் என்கிறாய். ஒரே குழப்பமாயிருக்கிறது! என்றார் குரு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.
~ ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ... இதற்கு பதிலளிக்க வேண்டியது இந்தியாவின் கடமை

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் முன்னிலைப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டமூலம் இன்னமும் அரங்கேற முடியாமல் காத்துக் கிடக்கிறது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச சக்திகளின் துணை கொண்டு முடிவுறுத்தப்பட்ட பின்னர், இலங்கையில் தமிழ் மக்களின் இருப்புக் கேள்விக்குறியாகியுள்ளதென்பது தெரிந்ததே.

அதாவது 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புக்கான யுத்தத்தின்போது, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

அதன் வலியும் தாக்கமும் இன்னமும் கண்ணீராய் ஒடுகிறது.

இதுதவிர, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் துயரம் சொல்லிமாளா.

நிலைமை இதுவாக இருக்கையில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசாங்கத்துக்குத் துணை நின்ற உலக நாடுகள், இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைத்த வெற்றியோடு அமைதியாகின.

ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு யுத்தத்தின்போது படைத் தரப்பு இழைத்த குற்றங்களுக்கு – மனித உரிமை மீறல்களுக்கு எந்தவகையிலும் நீதி கிடைக்கவில்லை.

ஆக, இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக, சர்வதேச சமூகம் மௌனமாகிப் போயுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், இங்கு குறித்துரைக்கப்படும் சர்வதேச சமூகம் என்பதில் இந்தியா விலக்குப் பெறவில்லை என்ற உண்மையையும் ஈண்டு கவனிப்பது பொருத்துடையது.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் இன்னமும் எழுத்துருவில் மட்டுமே அடங்கிக் கிடக்கிறது.

இருந்தும் அதனை அமுல்படுத்த வேண்டும் என்பதில் இந்தியாவின் அக்கறையும் கருசனையும் போதுமானதல்ல.

ஆம், இலங்கையில் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள். அவர்களிடமே ஆட்சி அதிகாரம் இருக்கிறது.

எனவே ஆட்சியாளர்களுடன் சேர்ந்து போவதுதான் நல்லது என்றவாறு இந்தியாவின் கடந்த கால ஆட்சியாளர்கள் கருதினர்.

இதனால் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதில்கூட இந்தியாவின் அழுத்தம் இருக்கவில்லை.

இந்த நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்த வேண்டுமென தற்போது ஆட்சியில் இருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விரும்புகிறார்.

ஆனால் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கையில் இருக்கக்கூடிய பேரினவாதமும் பௌத்த மகா சங்கங்களும் கடும் எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து நிற்கின்றன.

இங்குதான் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாக – பலமற்றவர்களாக நிற்கின்றனர்.

இந்த இடத்தில் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தாவிட்டால், இந்தியா பதிலடி கொடுக்கும் என்றொரு பதிலை இந்திய மத்திய அரசு விடுக்க வேண்டும்.

இதனைச் செய்யாதவிடத்து, 13ஆவது திருத்தச் சட்டமூலம் இயற்கை எய்துவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## மல்வத்து - அஸ்கிரிய பீடங்களுடன் ஜனாதிபதி ரணில் விசேட சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களுடன் விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்போது, பிரிவெனா கல்வியின் தர மறுசீரமைப்பு அவசியம் என மல்வத்து அஸ்கிரிய பீடங்கள் முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, பாலி மற்றும் பௌத்த பல்கலைகழகத்தின் முதுநிலை பட்டதாரிகள் நிறுவன ஒழுக்கத்திற்கு மேலதிகமாக அந்தந்த பிரிவினரின் ஒழுக்கத்திற்கும் இணங்கும் வகையில் தேவையான விதிகள் மாற்றப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை அரச தலையீட்டுடன் நடத்துமாறு மல்வத்து அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் விடுத்த அழைப்பை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

(ம-7)

## குடிநீர் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு காணுங்கள்

### முசுரம்பிட்டி கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்டாவளை புளியம்பொக்கணை முசுரம்பிட்டி கிராம மக்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இக்கிராமத்தில் சுமார் 80 குடும்பங்கள் வாழ்கின்றன.

இங்கு குடிநீர் நெருக்கடி தொடர்ந்து நிலவுகின்றது. ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் அதிகளவு குடிநீர் நெருக்கடி காணப்படுவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் முசுரம்பிட்டி கிராமத்தில் குடிநீர் நெருக்கடியினை தீர்ப்பதற்கு அதிகாரிகள் நிரந்தர தீர்வு ஒன்றினை வழங்க வேண்டும் எனவும் கிராம மக்கள் தெரிவித்தனர். (நி-350)

## வீட்டில் வாகனம் மோதியதில் ஒன்றரை வயது குழந்தை பலி

(கொழும்பு)

களுபோவில பகுதியிலுள்ள வீடொன்றில் வாகனம் மோதிய விபத்தில் ஒன்றரை வயதுடைய குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

வாகனம் ஒன்றின் சாரதி வாகனத்தில் இருந்து பின்னோக்கி வர முற்பட்ட போது குழந்தை மீது மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுபோவில ரூபன் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான குழந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது.

வாகனச் சாரதியின் கவனயீனம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது குழந்தையின் மாமாவே வாகனத்தை இயக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொஹுவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

## சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் அழிப்பு

(கொழும்பு)

கடந்த 5 வருடங்களில் சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட வாகன உதிரிப்பாகங்களின் ஒரு தொகை இன்று கொடவத்தை கொள்கலன் முனையத்தில் அழிக்கப்படவுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் விசாரணைக்கு பின்னர் இந்த வாகன உதிரிப்பாகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட இத்தகைய உதிரிப்பாகங்கள் பெருமளவில் உள்ளன. அவற்றில் சுமார் 100 பாகங்கள் ஆரம்பக் கட்டமாக அழிக்கப்படுகின்றன.

பிற பொருட்களை இறக்குமதி செய்வதாகக் கூறி, இந்த உதிரிப்பாகங்கள் போலி ஆவணங்களை தயாரித்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்த உதிரிப்பாகங்கள் சந்தையில் வெளியிடப்பட்டால், தரமற்ற வர்கனங்கள் கூட்டிணைக்கப்படும் அபாயம் உள்ளது.

இதன் காரணமாக உதிரிப்பாகங்களை அழிக்க நடவடிக்கை எடுப்பதாக சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## மத்தல விமான நிலைய செலவு வருமானத்தை விட 21 மடங்கு அதிகம்

மத்தல சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு செலவுகள் அதன் வருமானத்தை விட 21 மடங்கு அதிகமென தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளிப்படுத்தியுள்ளது.

வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் 2021ஆம் ஆண்டறிக்கை தொடர்பான ஆய்வறிக்கையை முன்வைத்து தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரை மத்தல சர்வதேச விமான நிலையத்தின் நிகர நஷ்டம் 20.59 பில்லியன் ரூபாவாகும் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தல சர்வதேச விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகள் கொள்ளளவு ஒரு மில்லியனாகக் காணப்பட்ட போதிலும், கடந்த 5 வருடங்களுக்குள் 91,747 பயணிகள் மாத்திரமே இதனூடாகப் பயணித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களால் மத்தல சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமானத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிதி வினைத் திறனான முறையில் பயன்படுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் அதன் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, இரத்மலானை விமான நிலையமும் தொடர்ச்சியாக நஷ்டத்தை சந்தித்து வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இந்த விமான நிலையத்தின் ஊடாக 1,693 மில்லியன் ரூபாவிற்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கிளிநொச்சியில் ஆண் ஒருவர் படுகொலை

### சந்தேகநபர் தொடர்ந்து மறியல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதியில் ஆண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய, சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உருத்திரபுரம் - சிவநகர் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி மரணவீடு ஒன்றில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த கொலை சம்பவம் குறித்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், நேற்று முன்தினம் மேலும் ஒரு சந்தேகபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக குறித்த சம்பவம் தொடர்பில், இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களும், எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியை தக்க வைப்பது தொடர்பில் பல வியூகங்களை வகுக்கும் ரணில்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(முறிகண்டி)

கட்சி மற்றும் பதவிகளை தக்க வைப்பது தொடர்பிலே பல வியூகங்களை ரணில் விக்கிரம சிங்க வகுக்கிறார் என பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து, ஜனநாயக ஆட்சி முறையை இல்லாது செய்வதிலும் ஜனநாயகம் என்பதற்கு பல விளங்கங்களை சொல்லியும் போராட்டங்களை முன்னெடுத்த இன்றைய நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களே இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது ஓர் துரதிஸ்டவசமானது.

அவரை ஒரு லிபரல்வாதி என்றுதான் பலர் வெளி உலகிலே சொல்லுவார்கள். அந்த லிபரல் தன்மை கொண்டவர், இன்று ஜனநாயகத்தை மதிக்காத அல்லது ஜனநாயக முறைகளை ஏற்றுக் கொள்ளாத வராக அவர் இந்த நாட்டிலே காணப்படுகிறார்.

அவருடைய காலத்தில் பெரிய அநியாயங்கள் நடைபெறுவதற்கான கட்டியம்தான் இந்தத் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதற்கு, தேர்தல் நிறுத்தப்படுவதற்கு அல்லது பின்னுக்கு கொண்டு செல்வதற்கு காரணமாக அமைகின்றது.

ஆகவே இந்த சவால்களை எதிர்கொண்டு, தேர்தலுக்கு தயாராகின்றோம் என்ற செய்தியை மக்களுக்கு சொல்ல வேண்டும்.

ஏனென்றால், நாங்கள் அடிப்படை உரிமைக்காகவும் வாழ்வியல் உரிமைக்காகவும் இந்த தேர்தல் பயணத்தை மேற்கொள்பவர்கள். நாங்கள் இதன் மூலம் நாடு பிடிக்கிற விடயத்துக்குரியவர்கள் அல்ல. எங்களுக்கு முன்னால் பல போராட்டங்கள் விரிந்து போய் கிடக்கின்றது.



பல போராட்டங்கள் எங்களை அழைக்கின்றது. நாங்கள் இந்த மண்ணிலே வாழ வேண்டியதற்காக போராட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, போராட வேண்டிய காலத்துக்கான அறிகுறியாக இந்த தேர்தலை ஓர் களமாக நாங்கள் பயன்படுத்த வேண் டும் என அவர் குறிப்பிட்டார். (நி-100)

## 'உதயசூரியன்' சனசமூக நிலைய ஆண்டு விழா

(சாவகச்சேரி)

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு விழாவும் கலையரங்க திறப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 6 மணிக்கு உதயசூரியன் சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

உதயசூரியன் சனசமூக நிலைய தலைவர் வே.குகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-30)

# தேர்தலின் பின்னர் ஒன்றிணைவோம்

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு



(முறிகண்டி)

இனப்பிரச்சினை, நில விடுவிப்பு உள்ளிட்ட விவகாரங்களில் அழுத்தங்களை பிரயோகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள அனைவரும் ஒன்றாகவே செயற்படுவோம் என மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சியின் அரசியலமைப் பின்படி தமிழரசுக்கட்சியின் கீழ் தான், கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள் என குறிப்பிட்டுள்ள மாவை சேனாதிராஜா, தேர்தலின் பின்னர் அனைவரும் ஒன்றிணைவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேர்தலில் கூட்டமைப்பாக இல்லாமல் தனித்தனியாக போட்டியிட்டு சிறு வாக்குகளால் விகிதாசாரத்தில் வந்து ஆட்சி அமைப்பதை தவிர்க்கும் வகையிலேயே தந்திரமாக போட்டியிடுகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய மாவை சேனாதிராஜா, தேர்தலிற்காக நிதி ஒதுக்கப்பட்ட போதும் அதனை விடுவிக்காமல் இருப்பது குறித்து கடும் கரிசனையும் வெளியிட்டுள்ளார். (நி-100)

## அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கிப் பாவனை உரிமையாளர் கைது; பொருட்கள் பறிமுதல்

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் நேற்று முன்தினம் களியாட்ட நிகழ்வு ஒன்றில் அயலவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் ஒலிபெருக்கியின் சத்தத்தை அதிகப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒலிபெருக்கியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பயன்படுத்திய பொருட்கள் அனைத்தும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## காசிப்பிள்ளை பரமானந்தம்

(உரிமையாளர் காசிப்பிள்ளை அன்சன்ஸ், லக்சுமி டிஜிற்றல்கலர் லாப்)

திதி - வளர்பிறை அமாவாசை

20.02.2023



ஆற்றுப்படுத்த ஆருமின்றி ஆறாத்துயரில்
எம்மை ஆழ்த்தி மண்ணுலக வாழ்வு
போதும் என்று எண்ணி விண்ணுலக வாழ்வை
தேடிச் சென்று - ஆறிரண்டு திங்கள் கடந்தாலும்
நீங்கள் இல்லா வெற்றிடத்தை நிரப்ப உறுதுணையாய்
இருப்பது உங்கள் நினைவுகள் மட்டுமே
அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாகிய
எமது குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 27.12.1947 மறைவு 02.03.2022

என்றும் உங்கள் நினைவுகளுடன்
- குடும்பத்தினர்

அராலி வீதி, சங்கானை.

(C-6012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள்...

ணையின் மூன்றாம் கட்டம், எதிர் வரும் மார்ச் 24 ஆம் திகதி வரை தொடரும் என்றும், 2023ஆம் ஆண்டின் முதலாம் தவணை மார்ச் 27ஆம் திகதி முதல் தொடங்கும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், முதலாம் தரத்துக்கு மாணவர்களுக்கான புதிய பாடசாலை தவணை, முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-7)

## தேர்தலை சீர்...

கடந்த வருடம் மார்ச் 20ஆம் திகதி நடத்தப்பட வேண்டிய தேர்தல், கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாகத் திட்டமிடப்பட்டுள்ள போதிலும், தேர்தலை இடைநிறுத்தும் நடவடிக்கைகள் குறித்து தமது கவலையை வெளியிடுவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர்கள் தமது பதவியில் இருந்து விலகியுள்ளனர்.

இப்படியான விடயங்கள், ஜனநாயக நடவடிக்கைகளுக்கு முற்றிலும் முரணானது எனத் தெரிவித்துள்ள அந்த கண்காணிப்பு அமைப்பு, அரசாங்கம் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளது. (ம-7)

## இன்று இரவு...

யில் அதிகரிக்கப்பட்டது.

இதையடுத்து மின்சாரம் சார்ந்த அனைத்து சேவைகள் மற்றும் உணவுப்பண்டங்களின் விலைகளும் இருமடங்குகளால் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 36 நிலக்கரிக்...

தாகவும், 13ஆவது கப்பலை தரையிறக்கும் பணிகள் இன்று ஆரம்பமாகும் எனவும் அவர் குறிப்பிடடுள்ளார்.

36 நிலக்கரிக் கப்பல்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் நாமல் ஹேவகே குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் தொடர்ச்சியான மின்சார விநியோகத்துக்கு தேவையான நிலக்கரி தம்மிடம் உள்ளதாகக் குறிப்பிட்டார். (ம-7)

## மரத்தில்...

துள்ளார்.

கம்பளை நாரங்விட்ட பகுதியைச் சேர்ந்த சாந்தி குமாரி என்ற 50 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

அவருக்கு நான்கு மகள்கள் உள்ளனர், அவர்களில் மூன்று பேர் பாடசாலை செல்லும் வயதுடையவர்கள். மேலும் அவரது கணவர் தனியார் நிறுவனத்தில் கூலி வேலை செய்து வருவதும், இறந்தவருக்கு வேலை இல்லை என்பதும் தெரியவந்தது.

கணவன் சம்பாதிக்கும் வருமானம் குடும்பப் பராமரிப்பிற்குப் போதாததால் பாடசாலைப் பிள்ளைகளுக்கு உபகரணங்களை வழங்குதல், உணவு வழங்குதல், மருந்து வழங்குதல் போன்ற பணிகளைச் செய்ய முடியாமல் சிரமத்திற்குள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில் பிள்ளைகளுக்கு உணவு வழங்க பலாப்பழத்தை கண்டுபிடித்த இந்த தாய், மதியம் உணவு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

வீட்டின் அருகே இருந்த பலா மரத்தில் ஒரு பலாக்காய்இருப்பதைப்பார்த்து, அதை பறிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். நீளமான தடியில் கத்தியை ஒட்டியிருந்தாலும், பலாக்காய் அதை விட உயர்மாக இருப்பதால் அதை பறிக்க முடியவில்லை.

பலா மரத்தின் அருகே இருந்த ஜாதிக்காய் மரத்தில் ஏறி அதனை பறிக்க முயற்சித்துள்ளார். எல்லா முயற்சிகளும் பலனளிக்கவில்லை பிள்ளைகளை நினைத்து பலாக்காயை பறிக்க மரத்தில் ஏறியுள்ளார்.

இந்நிலையில் மரத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். (ம-7)

## குடியரசு...

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் 34 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற குடியரசு பெரஹரா நேற்று கண்டி நகரில் வீதி உலா வந்தது.

இதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது. 75 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு இந்த பெரஹரா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று மாலை 6.45 மணியளவில் கண்டி மங்களகூடத்தில் இருந்து ஆரம்பித்த பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி வழியாக ரஜ வீதியில் பிரவேசித்து மீண்டும் தலதா மாளிகையை வந்தடைந்தது.

யானைகள் மற்றும் தலதா மாளிகை மற்றும் நான்குமகாதேவாலய நடனக் குழுக்கள் உட்பட அனைத்து பெரஹரா கலாசார அம்சங்களுடனும் இந்தக் குடியரசு பெரஹரா வண்ணமயமாக அமைந்திருந்தது. (ம-7)

## தேர்தல் பணி...

வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் தலைமை அலுவலகம் உட்பட அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களும் மூடப்பட்டிருக்க வேண்டும் என்றும் அந்த நாட்களில் அலுவலகத்தை ஏதேனும் விசேட பணிக்காக திறக்க வேண்டும் என்றால் தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெற வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது பணிபுரியும் தற்காலிக மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்களின் சேவைகள் பெப்ரவரி 17ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அலுவலக நேரத்துக்குப் பின்னர் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் பணிகளுக்காக ஏனைய அரச துறைகள் மற்றும் அலுவலகங்களில் இருந்து தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் அந்தந்த பணியிடங்களுக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ம-7)

## ஆர்ப்...

உள்ளிட்ட பல முக்கிய சேவைகள் முடங்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினால் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கொழும்பு - புறக்கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வைத்தியசாலை சேவைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதா? அல்லது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதா? என்பது தொடர்பில் நாளை செவ்வாய்க் கிழமை தீர்மானிக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

ஆனால், 22ஆம் திகதி தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பினால் போராட்ட நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## தகுதியற்ற...

மற்றும் விடுதிகள் திருப்தியற்ற நிலையில் காணப்படுவதால் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"இலங்கையில் தற்போதுள்ள 18% விடுதிகள் மற்றும் உணவகங்கள் திருப்தியற்ற நிலையில் உள்ளன. குறிப்பாக மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்றன. மேலும் 27% உணவகங்கள் சாதாரண நிலையில் உள்ளன. 55% உணவகங்கள் மிகவும் சிறந்த நிலையில் உள்ளன என்றார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1491
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 8 6 8 1 5 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1066
U 22 25 51 61
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 3278
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 21 53 56 67
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 19/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1384
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
I 22 01 46 52 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 345
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 03 21 24 39 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/19
சீட்டிழுப்பு இலக்கம் 5036
ஆங்கில எழுத்து வெற்றிபெற்ற இலக்கங்கள்
S 5 0 1 9 6 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2011
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.19
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
E 22 24 59 63
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 3,907,860/-
DLB

ஞாயிற்றுக்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2023.02.19
சீட்டிழுப்பு இல : 4172
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,337,260/-
வெற்றி இலக்கங்கள்
04 24 44 74
ஆங்கில எழுத்து S
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 290
சீட்டிழுப்பு திகதி 2023.02.19
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
12 18 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,464,820/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
வெற்றி இலக்கங்கள்
06 18 19 56
மேஷம்
திகதி 2023-02-19
வெற்றி வாரம் 3723
வர்ணம் ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,490,620/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 40 25 27 33 44
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1187
வர்ணம் மஞ்சள்
திகதி 2023.02.19 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 307,201,576.20
DLB
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1837
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,031,420/-
அத கோடிபதி
ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள்
04 06 17 71
ஆங்கில எழுத்து J
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14654)

076 825 7716 (ஆகாஸ்)


இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை

# பேக்கரி தொழிலில் பயன்படுத்த வழி காட்டல்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை பேக்கரி தொழிலில் பயன்படுத்துவதற்கான தொடர் வழிகாட்டல்களை தயாரிக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும்சுகாதார திணைக்களத்திற்கு அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை பேக்கரி பொருட்களுக்கு பயன்படுத்தும்போது, கையுறைகளை பயன்படுத்த வேண்டும் மற்றும் முட்டை ஓடுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அழிக்க வேண்டும்.

மீதமுள்ள முட்டை ஓடுகளை சுற்றுச்சூழலில் வெளியிடக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நாடுகளில் பரவிவரும்பறவைக் காய்ச்சல் வைரஸ் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் இந்த வழி காட்டுதல்கள் வெளியிடப்படவுள்ளன. (ம-7)


சுய தொழில்வாய்ப்பு • நிறைந்த வருமானம்

V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD உடன் இணைந்து

புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டா) சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

V2 TRAVELS 0777-068-777 (C-6013)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6013)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் திரு.ம.அலஸ்ரீன் அவர்களின் அன்புத் தாயார்.

திருமதி **மனுவல்பிள்ளை செபஸ்ரியம்மா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், வளவாளர்கள்,
ஆசிரிய வாண்மை விருத்தி நிலையம் - தீவகம் வேலணை. (14661)



யாழிலிருந்து...
Zoom Online Class
## வரலாறு
A/L, O/L (தரம் 10,11)
SB.Sanu (பிரபல பாடசாலை ஆசிரியர்)
பிரிவு -02
ஆரம்பம் : 19.02.2023 (ஞாயிறு 7.30 pm)
நாட்டின் எப்பகுதியில் இருந்தும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புக்கு :- 077 834 3666,
077 214 0675 (Whatsapp) (14618)



## வீடு விற்பனைக்கு

மருதனார் மடத்தில் இருந்து மானிப்பாய் செல்லும் வழியில் 500m தூரத்தில் றோட்டில் இருந்து 50m உள்ளே புதிய வீடு விற்பனைக் குண்டு விலை பேசி தீர்க்கப்படும்.

தொடர்பு :-
076 132 1961 (14663)



## INFORMATION TECHNOLOGY PARK
*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Investment Promotion*

MPCS Building
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் உயர்தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கும் மற்றும் ஏனையவர்களுக்குமான விசேட விரிவுரை வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

SPECIAL BATCH

*Dip.in Microsoft Office*
*Dip.in Desktop Publishing*
*Dip.in Information Technology*
*Dip.in Computer Programming*

Online Course

*Dip.in PC Application & Office Management* -06 Month-

Languages

*VB.net* *PHP* *C/C++*
*C#* *Java* *AotoCAD* -06 Month-

Workshops

*Internet & e-mail*
*Webpage Designing & Development* -20 hours-

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம் (C-5993)

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 03.03.2023
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 04.03.2023

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*
-Executive Officer-



நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

## சித்தாரா துளசி அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்) (C-6007)



## Biology
Zoom & Direct
A/L Day Class

Royal Biology - Kopay
School of Science - Jaffna (14628)

TP : 077 401 2800
By : Sutha Sir
(Chavakachcheri Hindu College)



## பணியாளர்கள் தேவை

அப்பள உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பணி நிலைகளிற்கு பணியாளர்கள் தேவை.

1. கணக்காளர்
2. அப்பளம் தயாரிப்பவர்கள்

• மேற்படி பணி நிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் (ஆண் / பெண்) விரும்பத்தக்கது

• விண்ணப்பங்களை 28.02.2023 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உடன் தொடர்புகளுக்கு :-
076 668 6054
சி.உமாகாந்தன்
அறிவொளி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர். (14655)



CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

## CHOLA FOODS & CIMS COLLEGE

SCHOLARSHIPS
முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்

வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு



• FOOD & BEVERAGE
• COOKERY
• HOUSE KEEPING
• FRONT OFFICE
• DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)

✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது

0777-068-777 (C-6014)



## புதியதோர் உதயம்
யாழ்குடாவில்
## "முத்து தீவு"
Pearl Island Inn

உங்கள் பசிபோக்கி, தங்க வைத்து, தூங்க வைத்து அனுப்புவோம்.
ஒருமுறை சுவைத்தால், அதையே நாக்கு தினம் கேட்குமே,

இன்று தொடக்கம் சுவை விரும்பிகளோடு
Pearl Island Inn
முத்துதீவில், முத்தான யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் பாரம்பரிய மணம் கமழும் வகையில் பழரசங்கள், குளிர்களிகள் மற்றும் உயர்தரம் வாய்ந்த 'தங்ககங்கள்' இன்னும் பல... (C-6011)

"அனைவரும் வாரீர் எம் சுவை அறிந்து போவீர்"



தொடர்புகளுக்கு :
077 002 2088
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org